# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2417 - 2024 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2024.12.27

2417 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2396 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2408 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, சனவரி மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**தீபா நிலந்தி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 25 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2393 - B 82640 - 403 (2024/12)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. சேவை நிபந்தனைகள் : பொது

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. பணிக்கமர்த்தும் நியதிகள் :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. யுத்த சேவைச் சலுகை :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் சேவை தொகுதியின் ஆய்வுகூட தொழில்நுட்பவியல் சேவை அலுவலர் தரம் III இன் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2024

(Open Competitive Examination for Recruitment to the Post of Laboratory Technological Services Officer -Grade III of the Sri Lanka Technological Service – 2024)

01. அரசாங்கத்தின் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் சேவை தொகுதியின் ஆய்வுகூட தொழில்நுட்பவியல் சேவை அலுவலர் - பயிலுனர் தரத்தின் 16 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு, பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கையின் பெண்/ஆண் இருபாலார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

03. இந்த போட்டிப் பரீட்சையானது பரீட்சை திணைக்களத்தால் 2025, சனவரி மாதம் கொழும்பு நகரத்தில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

04. பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். குறித்த சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுதல் வேண்டும்.

05. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

5.1 ***கல்வித் தகைமைகள்***

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) விஞ்ஞான விடய துறையின் கீழ் கல்வி பொது தராதர (உயர் தரம்) பரீட்சையில் சேவைக்கு ஏற்புடையதாக இரசாயனவியல் பாடம் உட்பட இணைந்த கணிதம், பௌதீகவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களில் மூன்று (03) பாடங்களில் (பொது அறிவு தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதி திகதியில் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். அதற்கேற்ப 2006.08.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1994.08.09 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த திகதியுடையவர்கள் மட்டும் இதற்காக விண்ணப்பம் செய்வதற்கு தகைமைப் பெறுவார்கள்.

5.3 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

5.4 விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமும்; மற்றும் சிறந்த உடல் ஆரோக்கியம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5.5 ஏதேனும் சமய பிரிவுக்கு உரிய மதகுருமார் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையற்றவராவார்கள்.

5.6 விண்ணப்பதாரி உரிய அனைத்து தகைமைகளையும் உரிய வயதெல்லையையும் விண்ணப்பம் கோருகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியில் எல்லா வழிகளிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே, சேவைக்கு சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

06. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

❖ விண்ணப்பமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத் தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Applications - Recruitment Exams/ E.B.Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை தொடர்பு மூலம் (Online) மட்டுமே சமர்ப்பிக்கலாம். நிகழ்நிலை தொடர்பு மூலம் (Online) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படுதல் 2024, திசெம்பர் மாதம் 30 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2025, சனவரி மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவடையும்.

❖ நிகழ்நிலை தொடர்பு மூலம் (Online) பரீட்சைகளுக்கான விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டும் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியால் நிகழ்நிலை மூலம் முன்வைக்கப்படும் விண்ணப்பம் செல்லுபடியான விண்ணப்பப் படிவம் என்று திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக் கொள்ளப்படவில்லை தொடர்பாக, முறைமையை அணுகுவதற்கு பயன்படுத்திய கைத்தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தி மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் அறிவிக்கப்படும். நிகழ்நிலை தொடர்பு மூலம் (Online) விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சை பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனை பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்கின்றபோது குறித்த ஆலோசனைகளை கட்டாயமாக பின்பற்றவும்.

❖ தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தின் பிரதியை தமது சுயவிபரக் கோவையில் உள்ளடக்குவதற்கு நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் சான்றுப்படுத்திய விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தும் கடிதமொன்று சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

இந்த பரீட்சைக்காக விசேட தேவைகளுடன் கூடிய விண்ணப்பத்தாரிகள் தோற்றுவதாயின், அது தொடர்பாக விண்ணப்பத்தில் கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், உரிய மருத்துவ சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

07. பரீட்சைக்கான அனுமதி அட்டை, பரீட்சை நடைபெறுகின்ற திகதி மற்றும் பரீட்சை நேர அட்டவணை பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டவுடன், அது தொடர்பில் குறிப்பிடப்படுகின்ற அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும். மேலும் விண்ணப்பத்தாரிகளுக்கும் குறுஞ் செய்தி மூலம் (SMS) அறிவிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிட்டால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். உங்களிடம் வைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியும், கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்காக தொலைநகல் இலக்கம் ஒன்றுடன் கடிதம் ஒன்றையும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

08. பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடம் பொருட்டும் மண்டபத்தின் பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன், அதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அதேபோன்று பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடப்படாது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பத்தாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பத்தாரியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மூடாதிருத்தல் வேண்டும்.

09. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதி உரியவாறு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கப் பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்குதல் விண்ணப்பதாரி இந்தப் பதவிக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது. எழுத்துப் பரீட்சையில் உச்ச திறனைக் காண்பிக்கின்ற விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா எனப் பரீட்சிக்கின்ற போது தேவயான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என தெரிய வருமிடத்து அவர்கள் நியமனங்கள் வழங்குவதற்கு தகுதியற்றவர்களென கருதப்படுவர். பரீட்சை நடாத்தல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். குறித்த சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாவார்.

10. இந்த அறிவித்தலில் வெளிப்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பாகவும், நியமனம் வழங்குதல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்கின்ற அதிகாரமும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு உரியதாகும்.

**11. பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600/- ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்துகையில் நிகழ்நிலை (Online) அமைப்பின் மூலம் வழங்கப்படும் பின்வரும் கட்டணங்களை செலுத்தும் முறைமையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணையத் தள கொடுப்பனவு வசதிகளுடன் எந்தவொரு வங்கி பற்றட்டை மூலம்(Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கி ஒன்லயின் வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கி கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

*குறிப்பு :-*

(அ) மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவு களை செய்தல் தொடர்பான ஆலோசனைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்கு ஏற்புடைய தான தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறுதல் தொடர்பாக குறுஞ் செய்தி மூலம் (SMS) அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் பொருட்டு மொத்த பணத்தொகையும் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அதிகமா கவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்படி கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பு கூற மாட்டாது.

(இ) பரீட்சை பொருட்டு செலுத்தப்பட்ட மொத்த தொகை எந்தவொரு காரணம் கொண்டும் மீள செலுத்தலோ வேறு பரீட்சைக்காகவோ மாற்றம் செய்யப்படமாட்டாது.

**12. எழுத்துப் பரீட்சை:**

இந்தப் போட்டிப் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சாத்திகள் பரீட்சையில் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். எழுத்துப் பரீட்சை பின்வருமாறு இரு வினாப் பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

(I) நுண்ணறிவுத் தேர்வுப் பத்திரம்
(II) விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப வினாத்தாள்

**13. பாடத்திட்டம்:**

(i) நுண்ணறிவுத் தேர்வுப் பத்திரம்: 01 மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள்.

இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய 50 வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதுடன் அத்தகைய சகல வினாக்களுக்கும் பரீட்சாத்திகள் விடையளிக்க வேண்டும்.

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான ஆற்றல், புள்ளிவிபர ரீதியான ஆற்றல், திறனாய்வு ஆற்றல் மற்றும் விவேகத்தைப் பரிசோதிக்கும்; வகையிலான வினாக்களை கொண்டமைந்திருக்கும்.

(ii) விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப வினாத்தாள்: 02 மணித்தியாலங்கள் - மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

இவ்வினாத்தாள் கட்டமைவு முறையிலான, கட்டுரை வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதோடு சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

விண்ணப்பதாரியின் இரசாயனவியல் அறிவு தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கான வினாக்களை உள்ளடக்கியிருக்கும்.

**14. தெரிவு செய்யப்படும் முறை:**

i. தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40% (சதவீத) புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பரீட்சையில் தகைமை பெறுபவர்களில் கூடுதான புள்ளிகளைப் பெற்றுக் கொள்கின்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேறுகள் பற்றிய குறிப்பை பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்புவதற்கு அல்லது திணைக்கள இணையத் தளத்தின் ஊடாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

ii. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சாத்திகளை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக தெரிவு செய்து, அவர்களை ஆய்வு கூட தொழில்நுட்ப சேவை அலுவலர் - பயிலுனர் தரத்தின் பதவியில் நியமிக்கப்படும்.

iii. பயிற்சி காலப்பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர், திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக வழங்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்த பின்னர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

15. பின்வரும் ஆவணங்களை தேவைப்படுகின்ற போது சமர்ப்பிக்குமாறு பரீட்சாத்திகள் வேண்டப்படுவர்:

(அ) பெற்றுக் கொண்டுள்ள அதிகூடிய கல்வி மற்றும் தொழில்நுட்பச் சான்றிதழ்கள்.

(ஆ) பதிவாளர் நாயகத்தால் வழங்கப்படுகின்ற பிறப்புச் சான்றிதழ்.

(இ) அண்மையில் பெறப்பட்ட மூன்று (03) நற்சான்றிதழ்கள் (இவற்றில் இரண்டு இறுதியாக கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்தும் மற்றதை வதியும் பிரதேசத்தின் கிராம சேவை யாளரிடமிருந்தும் பெற்றிருக்க வேண்டும்).

16. **மருத்துவப் பரிசோதனை:**

தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தாம் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு உடல் ரீதியில் தகுதியானவர் என உறுதிப்படுத்துவதற்காக மருத்துவ பரிசோதனையொன்றுக்கு தோற்றுதல் வேண்டும் என்பதுடன் மருத்துவப் பரீட்சையில் தகுதியற்றவர்களாகக் காணப்படுமிடத்து தொழிலுக்கு தகைமையற்றவர்களாகக் கருதப்படுவாரகள்.

17. **சம்பள அளவுத்திட்டம்:**

பயிற்சி காலம் - ( பயிற்சி காலம் 02 ஆண்டுகளாகும்)

பயிற்சி காலப் பகுதியில் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் படி கொடுப்பனவு வழங்கப்படும். (அரசாங்கத்தால் அவ்வப்போது அங்கீகரிக்கப்படும் சம்பள சுற்றறிக்கைகளுக்கமைவாக கொடுப்பனவுகளில் மாற்றம் ஏற்படலாம்)

III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்த பின்னர்

MN – 03-2016 - ரூபா 31,040.00 - 10 x 445- 11 x 660 - 10 x 730-10 x 750- ரூபா 57,550.00

18. **சேவை நிபந்தனைகள்:**

18.1 02 வருட பயிற்சிக் காலப்பகுதியின் பின்னர் நிரந்தர நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்துக்கு அமைவானதாக இருக்கும்.

18.2 தெரிவு செய்யப்படுபவர்கள் விதவை, அநாதை/ தபுதாரர் அநாதை ஓய்வூதிய நிதியத்து க்கு உதவு தொகை செலுத்த வேண்டும் என்பதோடு, ஓய்வூதிய சம்பள முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

18.3 தெரிவு செய்யப்படுபவர்கள் இலங்கை தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பு, தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள், திணைக்கள கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தால் ஏற்கனவே வெளி யிடப்பட்டுள்ள மற்றும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படுகின்ற ஏனைய கட்டளை களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

18.4 2015.09.01 ஆம் திகதிய 1930/12 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகக் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவாக, ஆய்வுகூட தொழில்நுட்ப சேவை அலுவலர் தரம் III இற்கு நியமனம் செய்யப்பட்டு 03 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் 1 ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை யில் சித்தியடையதல் வேண்டும்.

18.5 நிரந்தர நியமனத் திகதி முதல் 05 வருட காலத்துக்குள் பொது நிருவாகச் சுற்றறிக்கை 7/2007 இல் குறிப்பிடப்பட்டவாறு தமது பதவிக்கு ஏற்புடையதான மட்டத்தின் இரண்டாம் அரச கரும தொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் அத்தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளத் தவறுமிடத்து அத்தேர்ச்சியை பெற்றுக் கொள்ளும் வரை சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும்.

18.6 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைகளில் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள் ஏற்புடையதா கின்றன.

19. அத்தகைய வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால் சிங்கள மொழியில் உள்ள வாசகம் மேலோங்கி நிற்கும்.

பி. எஸ். கே. ராஜபக்ஷ
அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்.

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
இல.31,
இசுரு மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை,
2024.12.20.

12-407

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சில், தொல்லியல் திணைக்களத்தின் சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் தொகுதியில் தரம் III இன்) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024/2025

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தொல்லியல் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை தொகுதியில் தரம் III இன் சட்ட அலுவலர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவிப்பில் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புத் திட்டம்** :

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில், கூடிய புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்துக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். அதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (06 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கல் நடைமுறைக்கு அமைவாக தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள்** :

(i) *கல்வி/ தொழில்சார் தகைமைகள் :*
உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

(ii) *அனுபவம்* :
உ யர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் சட்டத்தரணியாக மூன்று (03 ) ஆண்டுகளுக்கு குறையாத காலம் வினைத்திறனான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (வினைத்திறன்காண் தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுள்ள காலம், சான்றுபடுத்துபவரின் பதவி முத்திரை மற்றும் சான்றுப்படுத்திய திகதி தெளிவாக குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் அரசாங்க நிறுவனமொன்றில் சட்டத்துறை பதவியில்* மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(செயலாளர்/திணைக்களத்து/ நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட கடிதம் மூலம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.)

**குறிப்பு** : அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை, விண்ணப்பத்தாரியே சான்றுப்படுத்தி, பிரதிகளை விண்ணப்பப் படிவத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சேவைக்காலம் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் திகதி தெளிவாக குறிப்பிடப்பட்டு சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவிப்புகளின்றி நிராகரிக்கப்படும்.

* சட்டத்துறைச் சார்ந்த பதவி என்பது சட்டம் தொடர்பான பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்திருத்தல், ஆட்சேர்ப்புச் செய்கின்ற அடிப்படை தகைமைகளுடன் கூடிய பதவிகளாகும்.

(iii) *உடற் தகுதி* :
அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள தகைமை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) *ஏனைய தகுதிகள்* :
- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

* விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகளை அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்** : இந்தப் பதவி நிரந்தரமானதாகும். உங்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் விதிமுறைக்கேற்ப நீங்கள் அதற்கான உதவுதொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகளிலான நன்னடத்தை காலத்துக்கு உட்பட்டதாகும். பதவியில் நியமனம் செய்யப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு அமைவாக முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், உரிய ஏனைய அரச கரும மொழியில் / அரச கரும மொழிகளில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் கு டியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன், நீங்கள் நியமனம் பெ றுவதற்கு தகைமை பெற்ற மொழிமூலம் யாதெனில், நீங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலமாகும்.

4. **வயதெல்லை** :

விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியில் 21 வயதுக்கு குறையாதிருக்க வேண்டும் என்பதுடன், 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம் :**

2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் I ஆவ அட்டவணை பிரகாரம், இப்பதவிக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615.00 - 10 x 1,335 - 8 x 1630 - 17 x 2,170 - ரூபா 110,895.00 (SL - 01-2016) ஆகும்.

6. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்படும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| | *விபரம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின் படிப்பு பட்டம். | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டநிலை பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் உயர் சட்டக் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட பட்ட நிலை பின்படிப்பு சட்ட டிப்ளோமா | 20 | |

<table>
<tr><th></th><th>விபரம்</th><th>புள்ளிகள்</th><th>ஆகக்கூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td></td><td>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட<br>• முதலாம் வகுப்பு சித்தியுடன் சட்டமாணி பட்டம்<br>• இரண்டாம் வகுப்பின் உயர் சித்தியுடன் சட்டமாணி பட்டம்<br>• வகுப்பு சித்தியுடன் சட்டமாணி பட்டம்<br>• பொதுவான சித்தியுடன் சட்டமாணி பட்டம்<br>(ஈ) சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பின் சித்தி-<br>சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பின் சித்தி-<br>குறிப்பு : I - சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சை சிறப்பு சித்தியுடன் சித்தியடைந்திருந்தால் மட்டும் மேற்படி 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>குறிப்பு : II - அதிகூடிய தகைமை பொருட்டு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td><br><br>15<br>10<br>07<br>05<br>10<br>05</td><td></td></tr>
<tr><td>02.</td><td>மேலதிக தொழில்சார் அனுபவம்<br>வழக்குகளுக்கு ஏற்புடையதான ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விளக்கமளித்தல்
<table>
<tr><th></th><th>வழக்கு தொடருதல் (ஒரு வழக்கு பொருட்டு)</th><th>நீதிமன்றத்தின் முன் தோன்றி விளக்கமளித்தலுக்கான புள்ளிகள் (ஒரு வழக்கு பொருட்டு)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம் (Suprem court)</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாய அதிகார சபை</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு :<br>மேற்படி தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக ஏற்புடைய வழக்குத் தீர்ப்புகளின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு நடைபெற்ற திகதியின் வழக்கு அறிக்கையின் சான்றுப்படுத்திய பிரதியொன்று நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
<tr><td>03.</td><td>தகவல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான அறிவு<br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் பொருட்டு தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் பிரதான பாடமாக கற்றிருத்தல்.<br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது வேறு அரச அங்கீகாரம் பெற்ற தொழில்சார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான டிப்ளோமா</td><td><br>10<br><br>08</td><td>10</td></tr>
</table>

| | *விபரம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான NVQ 5 அல்லது அதற்கு கூடிய மட்டத்திலான டிப்ளோமா | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது வேறு அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்துறையில் பாடநெறி கற்று/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றி பெற்றுக்கொண்ட சான்றிதழ் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் என்ற வகையில் ஆகக்கூடியதாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.)<br><br>(*குறிப்பு* : ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்) | 04 | |
| 04. | **மொழித் திறமை** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழியை பிரதான பாடமாக உள்ளடக்கப்பட்டு பெற்றுக் கொண்ட பட்டம் | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் மாதிரி நீதிமன்ற போட்டிகளில் (Moot court competitions) குறிப்பிடப்பட்டுள்ள ஆங்கல மொழி வெளிப்படுத்தும் தன்மை<br>**ஒற்றையர் போட்டிகள்**<br>i. முதலாவது இடம்/ சிறந்த ஆற்றல் - 12<br>ii. இரண்டாவது இடம் - 10<br>iii. மூன்றாவது இடம்/ ஏனைய ஆற்றல்கள் - 08<br><br>குழு<br>i. முதலாவது இடம்/ சிறந்த ஆற்றல் - 10<br>. ii. இரண்டாவது இடம் - 08<br>iii. மூன்றாவது இடம்/ ஏனைய ஆற்றல்கள் - 06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட டிப்ளோமா அல்லது வேறு ஒரு நிறுவனத்தில் ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொண்ட SLQF3 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தின் டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றில்/ அரச பயிற்சி நிறுவனத்திடம் இணைந்துள்ள நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 1500 கற்கை மணித்தியாலங்களைக் கொண்ட கற்கைநெறியைக் கற்று பெற்றுக்கொண்டுள்ள ஆங்கில மொழிக்கான டிப்ளோமா | 10 | |

| | *விபரம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (ஈ) கல்விப் பொது தராதர சான்றிதழ் (உயர் தரம்) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்காக ஆகக்குறைந்தது அதிகூடிய சித்தி பெற்றிருத்தல் அல்லது IELTS மொத்த புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு கூடிய, TOEFL - IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL - CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட TOEFL - PBT 550 அல்லது அதற்கு மேற்பட்ட<br>(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட உயர் கல்விச் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழிக்கு பெற்றுக்கொண்ட SLQF2 மட்டத்திலான சான்றிதழ்<br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.) | 08<br>05 | |
| 05. | **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை**<br>பதவியில் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஆதாரமாக அமையும் விண்ணப்பதாரியின்<br>• ஆற்றல் (Strength Questions) (இரண்டு புள்ளிகள் 02)<br>• சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் (Situational Questions) (03 புள்ளிகள்) மற்றும்<br>• திறமை (Competency Questions) (10 புள்ளிகள்)<br>மதிப்பீட்டுக்கு உட்படுத்தலை நோக்கமாகக்கொண்டு வினாக்களுக்கு வழங்கும் பதிலுக்கமைவாக புள்ளிகள் வழங்கப்படும் | | 15 |
| | **மொத்தம்** | | **100** |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

அனைத்து வகையிலும் பூரணமான விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்தவர்கள் மட்டும் தகைமை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் உரியவாறு சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்க வேண்டிய முறை** :

(i) விண்ணப்பப்படிவம் 2025.01.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தொல்லியல் பணிப்பாளர் நாயகம், ஸ்ரீ மத் மார்கஸ் பிரனாந்து மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அன்றைய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பப்படிவத்தை ஏ4 அளவிலான தாளில் தயாரித்து முன் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 02 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 03 தொடக்கம் 06 வரையிலும், மூன்றாம் பக்கம் இலக்கம் 07 தொடக்கம் 10 வரையிலும், நான்காகம் பக்கத்தில் இலக்கம் 11 வரையிலும் அமையும் வகையில் தயாரித்து தமது கையெழுத்தில் பூரணப்படுத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் தரம் III இன் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது ரூபா 47,615.00 ஆன மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பத்தை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின், திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(vi) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரிக்கு அமைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்** :
உங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனுமொரு தகவல் பொய்யானதென அல்லது தவறானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரிய வந்தால், உங்களது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தன்மை ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பின்னர் தெரியவந்தால் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி வாசகங்களுக்கு இடையில் ஏதாவது ஒத்துவராமை அல்லது முரண்பாடுகள் ஏற்பட்டால், அதன் போது சிங்கள மொழி வாசகம் வலுவுள்ளதாக இருக்கும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயன்முறையில் ஏதாவது முரண்பாடான நிலை ஏற்பட்டால் அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
2024, திசெம்பர் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தொல்லியல் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை தொகுதியின் தரம் III இன் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

| |
|---|
| |

(அலுவலக பாவனைக்கு மட்டும்)
(விண்ணப்பிக்கும் மொழி மூலத்துக்குரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)
சிங்களம்-2/ தமிழ் -3/ ஆங்கிலம் - 4
*குறிப்பு* : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இயலாது.

1.0 1.1 முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :.......................................................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

1.2 முழுப்பெயர் :..................................................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் ; (திரு./திருமதி/செல்வி) :........................................................................................
(சிங்களத்தில்/தமிழில்) உதா.: எம். ஜீ. பி. எஸ். கே. குணவர்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் :..............................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :.......................................................................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :..................................................................................

3.0 3.1 பால் நிலை :ஆண் - 0 பெண் - 1 ☐ (உரிய கூட்டினுள் எழுதுக)

3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் : திருமணமானவர் -1 ☐

திருமணமாகாதவர் -2 (உரிய கூட்டினுள் எழுதுக)

3.3 பிறந்த திகதி : ஆண்டு: ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2025.01.28 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :..........................................................................................................

4.0 4.1 தொலைபேசி இலக்கம் : நிலையான .............................

கையடக்க ..............................

5.0 கல்வித் தகைமைகள்:

5.1

| பட்டப்படிப்பு | நிறுவனம் | திகதி |
|---|---|---|
| .................................. | ......................... | ................................. |
| .................................. | ......................... | ................................. |

6.0 உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதி :.........................................................................

6.1 உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் 03 ஆண்டுகளிலான அனுபவம் பூர்த்தி செய்யப்படும் திகதி ...................................................................

6.2 அரச நிறுவனமொன்றில் சட்டத்துறையைச் சார்ந்த பதவியொன்றில் 03 ஆண்டுகளிலான அனுபவம் பூர்த்தி செய்யப்படும் திகதி .........................................

* அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்கள்/ ஆவணங்கள் விண்ணப்பதாரியாலேயே உண்மையானதென உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

7.0 விண்ணப்பப்படிவம் கோரும் அறிவித்தலின் 06 ஆம் இலக்கத்தின் கீழான ஒவ்வொரு தகைமைகளையும் பெற்றுக்கொள்ளுவதற்கு ஏற்புடையதான விபரம் :.........................................................................

7.1 மேலதிக கல்வித் தகைமை :...................................................................
7.2 மேலதிக தொழில் அனுபவம் :...................................................................
7.3 தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு:...................................................................
7.4 மொழி அறிவு :...................................................................

* மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைக்கப்பட வேண்டியதில்லை என்பதுடன், குறித்த ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுவதற்கு தயாராக வைத்திருத்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

8.0 நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ஆம்/ இல்லை (ஆம் எனில் விபரங்களை குறிப்பிடுக)

.........................................................................................................................................

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் அனைத்து பகுதிகளும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும், என்னால் செய்யப்பட்டுள்ள வெளிப்படுத்தல் தவறானதென நிரூபிக்கப்பட்டால், நியமனம் செய்வதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் எனவும், நியமனம் கிடைத்த பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பது எனக்கு நன்றாக தெரியுமெனவும் அனைத்து சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : .............................

10.0 **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .......................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

......................................
கையொப்பத்தை சான்றுபடுத்தும் அலுவலரின் கையொப்பம்.

முழுப்பெயர் : .............................
பதவி : .............................
திகதி : .............................
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்.)

11.0 **திணைக்களத் தலைவரின் பரிந்துரை (அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு மட்டும்)**

மேலே விபரம் குறிப்பிட்டுள்ள திரு./திருமதி/செல்வி ............................................................................ என்பவர் இந்த நிறுவனத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது எனவும், வேலை மற்றும் வரவு திருப்திகரமானது எனவும், அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை எனவும், இந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கலாம் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

...................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .............................
பதவிப்பெயர் : .............................
முகவரி : .............................
திகதி : .............................
(பதவி முத்திரை இடவும்.)

12-415

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) கடற் பொறியியல் உதவியாளர் தரம் III (இலங்கை தொழில் நுட்ப சேவை) இற்காக அரசாங்க / மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஓய்வூதியம் உரித்தான பதவியொன்றில் சேவையாற்றும் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) கடற் பொறியியல் உதவியாளர் தரம் III (இலங்கை தொழில்நுட்ப சேவை) இற்கு ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான விண்ணப்பங்கள் கோரல் அறிவித்தலானது 2356 ஆம் இலக்கமுடைய 2024.02.02 ஆந் திகதிய வர்த்தமானியில் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டது. அவ்வர்த்தமானி அறிவித்தலில் 2024.03.01 எனக் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதியானது பின்வருமாறு நீடிக்கப்படுவதாக தயவுடன் அறியத்தருகிறேன்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2025.01.24

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications-Recruitment Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். 2024, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு. ப. 9.00 மணியிலிருந்து நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏற்கனவே சரியான முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது அவசியமன்று.

அத்துடன் இலக்கம் 2356 உடைய 2024.02.02 ஆந் திகதிய வர்த்தமானி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள இணையத்தளத்தில் (http://www.fisheriesdept.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது.

12-383

## திருத்தம்

"இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகுதியின் ஆராய்ச்சி தரம் III பதவிக்கு திறந்த மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரல் - 2024" என்ற தலைப்புடன் 2384 ஆம் இலக்க மற்றும் 2024.05.10 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் (4 பந்தி மற்றும் 8) ஆம் பந்தியின் (அ) இ (ஆ) பந்திகளை கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் திருத்தஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(4) மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**

2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை I இன் அடிப்படையில் இந்தப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூபா 31,040 - 10x455 - 11x660 - 10 x 730-10 x 750 - ரூபா 57,550 (MN03-2016) ஆகும். அதாவது ரூபா 31,040.00 ஆரம்ப சம்பளப் படிநிலையில் வைக்கப்படும். உங்களுக்கான சம்பளம் அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அமையும். இதற்குப் புறம்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பிற படிகளும் உங்களுக்கு உரித்தான தாகும்.

**(8) பரீட்சைக்கு பிரவேசித்தல்**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ள நபர்கள் மட்டும் விண்ணப்பித் துள்ளார்கள் என்ற முற்கருதுகோளின் அடிப் படையில் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பி யுள்ள விண்ணப்பதாரிகளுக்கு புகையிரத பொது முகாமையாளரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை திகதியன்று பரீட்சை

மண்டபப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இந்தப் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் புகையிரத பொது முகாமையாளரால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுவர். அச்சட்டதிட்டங்களை மீறினால் அவ்விண்ணப்பதாரிக்கு புகையிரதப் பொது முகாமையாளரால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்பட நேரிடும்.

இந்தப் பரீட்சையானது இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி அலுவலகத்தில் 2025.01.04 ஆந் திகதி நடாத்துவதற்கு புகையிரத பொது முகாமையாளரால் நடவடிக்கை எடுக்கப்படும். மேற்கண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைத் தொகுதியின் ஆராய்ச்சி உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் அறிவித்தலின் அடிப்படையில் விண்ணப்பங்களை இற்றைவரை சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் இந்தத் திருத்தம் பொருந்துமென அறிவிக்கிறேன்.

02. இந்த அறிவித்தலை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ். எஸ். முதலிகே,
புகையிரதப் பொது முகாமையாளர்.

மின்னஞ்சல் : gmr@railway.gov.lk
தொலைபேசி இல. : 011-4600111

12-393

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*